DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 62/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.2

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பிரகாஷ் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 03rd day of February, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது சிவகாசியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது பட்டாசு தயாரிப்பு தொழில் செய்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2018 ம் ஆண்டு வரை சிவகாசியில் சிவன் கோவில் தெருவில் வீடியோ சிடி கடை சொந்தமாக நடத்தி வந்தேன். எனது கடையில் நாராயண ராஜா என்பவர் பணி செய்து வந்தார். எனது கடைக்கு உரிமம் இல்லாமல் கடையை நடத்திவந்ததால் என் மீது வீடியோ பைரசி பிரிவு போலிசார் 2016, 2017 ஆகிய வருடங்களில் என் மீது குண்டாஸ் வழக்கு பதிவு செய்தார்கள். நான் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் வெளிவந்தபின்பு எனக்கு தொடர்ந்து கடையை நடத்தக்கூடாது என்று வீடியோ பைரசி பிரிவு அதிகாரிகள் கூறினார்கள். ஆஜர் 1ம் எதிரி விருதுநகர் வீடியோ பைரசி பிரிவின் காவல் ஆய்வாளராக பணியாற்றிவந்தார். 2ம் எதிரி அதே பிரிவில் காவலராக பணியாற்றி வந்தார்.

எனக்கு வீடியோ கடை தொழிலை தவிர வேறு தொழில் எனக்குத் தெரியாது. நான் எனது கடையில் நிறைய முதலீடு செய்திருந்தேன். அதனால்

எனக்கு தெரிந்த காவல்துறையில் உள்ள நபர் ஒருவரின் அறிவுரைப்படி உன்மீது குண்டாஸ் வழக்கு போட்டுவிட்டதால் உன்மீது மேலும் வழக்குகள் போடுவார்கள் என்றும், உன்னை நிம்மதியாக இருக்கவிடமாட்டார்கள், நான் உனக்கு ஒரு ஐடியா சொல்கிறேன் என்று சொன்னார். விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட் என்று ஒன்று உள்ளது. அங்கு சென்று நீ ரூபாய் கொடுக்கப்போவதை சொல். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். நீ நிம்மதியாக இருக்கலாம் என்று கூறினார்.

நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றேன். என்னுடன் எனக்கு ஆலோசனை சொன்னவரும் வந்தார். வெளியில் இருந்து எனக்கு அலுவலகத்தை காட்டிவிட்டு அவர் சென்றுவிட்டார். நான் அலுவலகத்திற்குள் சென்று அங்கிருந்த போலிசாரிடம் எனது பிரச்சனையை சொன்னேன். என்ன பிரச்சனை என்று கேட்டார்கள். என்மீது உள்ள வழக்குகளை முடிக்க முடியவில்லை. என்னால் வாழவும் முடியவில்லை. சாகவும் முடியவில்லை என்று அவர்களிடம் புலம்பினேன். இதற்கு காரணம் யார் என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் லோக்கல் போலிசாரிடமும் பிரச்சனையாக உள்ளது. வீடியோ பைரசி பிரிவில் இருந்தும் பிரச்சனையாக உள்ளது என்று கூறினேன்.

என்னிடம் உனக்கு நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான் என்மீது உள்ள வழக்குகளை முடிக்கும்வரை அவர்கள் என்னை தொந்தரவு செய்யாமல் இருந்தால் போதும் என்று சொன்னேன். தொந்தரவு செய்தால் நீ கடையை மூடிவிடு என்று கூறினார்கள். அதற்கு நான் அவர்களிடம் கடையில் நிறைய முதலீடு செய்துள்ளேன் என்று கூறினேன். அதற்கு அவர்கள் 10 முதல் 20 நாட்களில் உன் மீது இருக்கும் வழக்கினை முடிக்கமுடியாது. அதனால் நாங்கள் சொல்வது போல் செய் என்று கூறினார்கள்.

ரூ.5000/– பணம் எடுத்துக்கொண்டுவா என்று கூறினார்கள். மறுநாள் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து

எனக்கு போன் செய்தார்கள். நான் பணத்தை கொண்டுபோய் கொடுத்தேன். என்னை அவர்கள் அலுவலகத்தில் 1மணி நேரம் இருக்க வைத்தார்கள். என்னிடம் ஒரு வழக்கிற்கு அபராதம் செலுத்தி வழக்கினை முடித்துவிடுகிறேன் என்று வீடியோ பைரசி அலுவலகத்திற்கு சென்று சொல்லச்சொன்னார்கள். நான் அவர்கள் சொன்னது போல் நான் அவர்களிடம் கொடுத்த ரூ. 5000/- யை என்னிடம் திருப்பிக்கொடுத்து மேற்படி பணத்தை அவர்களிடம் கொடு. நாங்கள் வழக்கை முடித்துவிடுகிறோம் என்று கூறினார்கள்.

நான் மேற்படி ரூ. 5000/- பணத்துடன் வீடியோ பைரசி அலுவலகத்திற்கு சென்றேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் எனக்கு கொடுத்த அறிவுரையின் படி நான் எனது போனை ஆன் செய்து வைத்துக்கொண்டு வீடியோ பைரசி அலுவலகத்திற்குள் சென்றேன். நான் வீடியோ பைரசி அலுவலகத்தில் இருந்த ஆய்வாளரிடம் உங்களிடம் பேசி இருக்கிறார்கள் அல்லவா அதனால் என்மீது உள்ள வழக்கினை இந்த பணத்தை பெற்றுக்கொண்டு முடித்துக்கொடுங்கள் என்று கூறி பணத்தை கொடுத்தேன். அதற்கு வீடியோ பைரசி பிரிவு ஆய்வாளர் நான் வழக்கு போடுவதற்காக மட்டும் தான் இருக்கிறேன். நீ வழக்கு முடிப்பதற்கு நீதிமன்றத்தில் சென்றுதான் முடிக்கவேண்டும் என்று கூறினார். அந்த சமயம் 2ம் எதிரி 1ம் எதிரியின் அருகில் இருந்தார். 2ம் எதிரியிடம் நான் ஆய்வாளர் கோபமாக இருக்கிறார். அதனால் நீங்கள் அவரிடம் சொல்லி என்மீது உள்ள வழக்கினை முடித்துக்கொடுக்கச்சொல்லுங்கள் என்று கூறினேன். அதற்கு 2ம் எதிரி நீதிமன்றத்தில் பார்த்து முடித்துக்கொள்ளுங்கள் என்று கூறினார். மேற்படி நடந்த விபரங்களை எனது போனில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் உள்ளே வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் என்னிடம் இருந்த ரூ. 5000/- யை ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்பு பிரிவு போலிசார் வாங்கிக்கொண்டு என்னை கிளம்பு என்று சொல்லிவிட்டு 2ம் எதிரியின் கையை பிடித்துக்கொண்டார்கள். என்னை

வெளியில் போகச்சொன்னதால் நான் வந்துவிட்டேன். அதன்பின்னர் சாட்சி சொல்ல வரச்சொல்லும்போது வந்தால் போதும் என்று சொல்லிவிட்டார்கள். நான் சென்றுவிட்டேன். நான் செல்லும்போது இனிமேல் உன் மேல் உள்ள வழக்கு முடிந்துவிடும். வேறு தொந்தரவு கொடுக்கமாட்டார்கள் என்று கூறி என்னை அனுப்பிவைத்தார்கள்.

என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள 21.02.2018 தேதியிட்ட கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் மனு அசாஆ 2** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கையில் 14ம் காலத்தில் 21.02.2018ம் தேதியிட்ட கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ 3** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்பு மகஜரில் உள்ள 3 பக்கங்களில் இடமிருந்து வலமாக உள்ள 3வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அசாஆ 4** ஆகும். போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக என்னை 2 முறை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் எனது கடையில் வேலை பார்க்கும் நாராயணன் என்பவர் மீது வீடியோ சம்பந்தப்பட்ட 2 வழக்குகள் போட்டு அவர்மீது குண்டாஸ் நடவடிக்கை வீடியோ பைரசி போலிசார் எடுத்தார்கள் என்றும், என்மீது வழக்கு பதிவு செய்யாமல் இருப்பதற்காகத்தான் 1ம் எதிரி ரூ. 5000/- லஞ்சமாக கேட்டார் என்றும், அது சம்பந்தமாக என்னை வீடியோ பைரசி அலுவலகத்திற்கு அந்த அலுவலகத்தில் சிறு சிறு வேலைகள் பார்க்கும் மாரி என்பவர் 15.02.2018ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் என்னை சந்தித்து ஆய்வாளர் வரச்சொன்னதன் பேரில் நான் 20.02.2018ம் தேதி காலை 11.30 மணிக்கு வீடியோ பைரசி அலுவலகத்திற்கு சென்று ஆய்வாளரை

சந்தித்தபோது ஆய்வாளரான 1ம் எதிரி என்னிடம் உங்கள் கடையில் வேலை பார்க்கும் நாராயணன் மீது வழக்கு போட்டுவருகிறோம் என்றும், என்ன ஏது என்று எங்களை வந்து பார்க்கமாட்டாயா ? கேட்க மாட்டாயா என்றும், உன் மீது வழக்கு போடச்சொல்லி சொல்கிறார்கள் என்றும் அவ்வாறு நான் வழக்கு போடாமல் இருப்பதற்கும் சிடி கடையை தொடர்ந்து நடத்துவதற்கும் ரூ. 5000/- எனக்கு கொடுக்கவேண்டும் என்று 1ம் எதிரி கேட்டதாகவும், அதைத்தொடர்ந்து நான் 1ம் எதிரியிடம் நான் மிகவும் கஷ்டப்பட்டு கடை நடத்தி வருகிறேன் பார்த்து செய்யுங்கள் என்று சொன்னதாகவும், அதற்கு சிடி கடை நடத்தும் எல்லோரும் பணம் கொடுக்கிறார்கள் என்று சொல்லி ரூ. 5000/- தனக்கு கொடுக்கவில்லை என்றால் உங்கள் மீது புதிதாக கேஸ் போடவேண்டியது இருக்கும் என்றும், நீங்கள் சிடி கடையை நடத்த முடியாது என்றும் கண்டிப்பாக 1ம் எதிரி என்னிடம் கூறியதாகவும், நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்து நியாயமாக நடத்தும் தொழிலுக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லாமல் 21.02.2018ம் தேதி காலை 10.00 மணியளவில் புகார் கொடுத்ததாகவும் கூறிவிட்டு தற்போது புகார் நான் கைப்பட மட்டும் தான் வேறு ஒருவர் எழுதிக்கொடுத்ததை பார்த்து நான் எழுதினேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் அதைத்தொடர்ந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்த அரசு சாட்சிகள் முன்னிலையில் நடந்த பினாப்தலின் சோதனையில் நான் பங்கு கொண்டதாகவும், அதனைத்தொடர்ந்து ரூ. 5000/- நான் எனது பணத்தை பொறி வைப்பு நடவடிக்கைக்காக கொடுத்ததாகவும், அங்கு நடந்த நிகழ்வுகளுக்கு தயார் செய்யப்பட்ட ஒப்படைப்பு மகஜரின் விபரம் அறிந்து கையொப்பம் செய்ததாகவும், அதைத்தொடர்ந்து ஆய்வாளர் 1ம் எதிரியை அவரது அலுவலகத்தில் வைத்து சந்திக்கசொல்லி அறிவுரைகள் வழங்கியதாகவும், அதைத்தொடர்ந்து நானும், அரசு சாட்சி சரஸ்வதி என்பவரும் 1ம் எதிரியை அவரது அலுவலகத்தில் மாலை 4.15 மணியளவில் சந்தித்தபோது என் மீது வழக்கு பதியாமல் இருப்பதற்கும், கடையை தொடர்ந்து நடத்துவதற்கும்

அவரிடம் கேட்டபோது அவர் ஏற்கனவே கேட்ட லஞ்சத்தொகை ரூ. 5000/- என்னிடம் கேட்டு அதை நான் கொடுக்க முற்பட்டபோது 1ம் எதிரி 2ம் எதிரியான தலைமை காவலரை அழைத்து ரூ. 5000/- யை வாங்கி வைத்து தன்னிடம் பிறகு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் பவுடர் தடவிய பணத்தை 2ம் எதிரி பெற்று எண்ணிப்பார்த்து அதனை தனது ரோஸ் கலர் சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் வைத்துக்கொண்டவுடன், 1ம் எதிரி உன்மீது வழக்கு போடவில்லை என்றும் உனது கடைக்கும் தொந்தரவு கொடுக்கமாட்டோம் என்றும் கூறியதாகவும் அதைத்தொடர்ந்து நான் அரசு சாட்சி சரஸ்வதி என்பவருடன் வீடியோ பைரசி அலுவலகத்திலிருந்து வெளியில் வந்து எனது இடது கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை வலது கைக்கு மாற்றி சுமார் 4.40 மணியளவில் சைகை செய்தவுடன் விருதுநகர் ஊ.த.க.ஆய்வாளர் அவரது குழுவுடன் வந்து என்னிடமும் சாட்சி சரஸ்வதியிடமும் நடந்தவற்றை கேட்டு தெரிந்து கொண்டு என்னையும் அழைத்துக்கொண்டு அரசு சாட்சிகளுடன் வீடியோ பைரசி அலுவலகத்திற்குள் சென்றபோது நான் 1, 2ம் எதிரிகளை அடையாளம் காண்பித்தேன் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோன்று நான் எனது முதல் விசாரணையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் என்னிடம் சொன்னதன் பேரில் நான் எனது போனை ஆன் செய்து வைத்துக்கொண்டு வீடியோ பைரசி அலுவலகத்திற்குள் சென்றதாகவும், அங்கு வீடியோ பைரசி ஆய்வாளரான 1ம் எதிரி நீதிமன்றத்தில் தான் வழக்கினை முடித்துக்கொள்ள முடியும் என்று சொன்னதாகவும் ரூ. 5000/- யை வாங்க மறுத்ததாகவும், உடனே நான் 2ம் எதிரியிடம் ஆய்வாளர் கோபமாக உள்ளார் அதனால் நீங்கள் பணத்தை வாங்கிக்கொடுத்து வழக்கை முடிக்க சொல்லுங்கள் என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஊழல் தடுப்பு பிரிவு போலிசார்

நான் ஆன் செய்து வைத்திருந்த போன் மூலமாக உரையாடல்களை கேட்டு அங்கு வந்து என்னிடமிருந்து ரூ. 5000/- கைப்பற்றி 2ம் எதிரியின் கைகளை பிடித்துக்கொண்டதாக சொல்லியிருப்பது நான் 1 மற்றும் 2ம் எதிரிகளை காப்பாற்றுவதற்காக அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கற்பனையாக ஒரு கதையை உருவாக்கி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நான் முதன் முதலில் விருதுநகர் ஊழல் தடுப்பு அலுவலகத்திற்கு செல்லும் போது வீடியோ பைரசி அலுவலக ஆய்வாளரின் பெயர் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. புகாரில் உள்ள சங்கதிகளை விருதுநகர் ஊழல் தடுப்பு அலுவலகத்தில் உள்ள போலிசார் எழுதிக்கொடுத்த விபரங்களை பார்த்து அப்படியே வேறு பேப்பரில் எழுதினேன் என்றால் சரிதான். புகார் மனுவில் நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் நேரத்தில் வேறு சில வெற்றுத்தாள்களிலும் போலிசார் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வெற்றுத்தாள்களில் செய்த கையொப்பத்தைத்தான் நான் முதல் விசாரணையில் அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வீடியோ பைரசி அலுவலகத்தில் என் மீது போடப்பட்ட வழக்குகளில் சில வழக்குகளுக்கு நான் நீதிமன்றத்தில் ரூ. 2800/- மற்றும் 3500/- என அபராதம் செலுத்தியுள்ளேன். என் மீது போடப்பட்ட வழக்குகளில் நான் சாலைகளில் பையில் உரிமம் இல்லாத சிடிக்களை வைத்திருந்ததாகவும், அதனை காவல்துறையினர் என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் வழக்கில் கூறப்பட்டதாகவும் சொன்னால் சரிதான். நான் வீடியோ கடை எதுவும் நடத்தவில்லை என்றும், சட்டவிரோதமாக தெருக்களில் வைத்து சிடி விற்பனை செய்துவந்தேன் என்றாலும் சரியல்ல. என் மீது குண்டாஸ் வழக்கு போடப்பட்டதற்கும், நீதிமன்றத்தில் நான் என்மீது போடப்பட்ட வழக்குகளுக்கு

அபராதம் செலுத்தியதன் காரணமாகவும் வீடியோ பைரசி பிரிவு அலுவலர்கள் மீது எனக்கு வருத்தம் இருந்தது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொன்னதுபோன்று எனது கடையில் அதிக முதலீடு செய்துள்ளதால் என்னை காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்று எனக்குத் தெரிந்த நபரிடம் ஆலோசனை கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வீடியோ பைரசி காவல்துறையினரை பழிவாங்கும் நோக்கத்தில்தான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல.

வீடியோ பைரசி அலுவலகத்திற்கு நாங்கள் சென்றபோது அங்கு எந்த அதிகாரிகளும் இல்லை என்றால் சரியல்ல. நான் செல்லும்போது வீடியோ பைரசி அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது என்றாலும் சரியல்ல. விருதுநகர் ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளரிடம் நான் என்மீது உள்ள வழக்குகளை முடிக்க முடியவில்லை என்றும், என்னால் வாழவும் முடியவில்லை என்றும், சாகவும் முடியவில்லை என்று அவர்களிடம் புலம்பினேன் என்று அவர்கள் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.